2014 ஜூலை 30] [பேரவைத் தலைவர்]

நாளையதினம் பார்க்கலாம், உட்காருங்கள். (குறுக்கீடுகள்) திரு. க. பாலகிருஷ்ணன், நீங்கள் செய்வது முறையில்லை. (குறுக்கீடுகள்) இதுமாதிரியெல்லாம் செய்யாதீர்கள். (குறுக்கீடுகள்) தினமும் நீங்கள் கொடுக்கும் முறையான அறிவிப்புகளைத்தான் நான் எடுத்துக்கொண்டிருக்கிறேன். தினமும் எடுத்துக்கொள்கிறேன். இதற்கு மேலும் நீங்கள் திருப்தி அடையவில்லையென்றால் நான் என்ன செய்வது? (குறுக்கீடுகள்) நீங்கள் திருப்தி அடையவில்லையென்றால் நான் என்ன செய்ய முடியும்? (குறுக்கீடுகள்) நீங்கள் கொடுப்பது முழுவதையும் நான் எடுக்க முடியாது. (குறுக்கீடுகள்) நீங்கள் கொடுப்பது முழுவதையும் நான் எடுக்க முடியாது. (குறுக்கீடுகள்) நீங்கள் ஒரு முடிவுடன்தான் வந்திருக்கிறீர்கள், உட்காருங்கள். (குறுக்கீடுகள்) திரு. ஆறுமுகம், நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடுகள்)

(இந்திய கம்யூனிஸ்டு (மார்க்சிஸ்ட்) கட்சி, இந்திய கம்யூனிஸ்டு கட்சி உறுப்பினர்களும், புதிய தமிழகம் கட்சி உறுப்பினர் டாக்டர் க. கிருஷ்ணசாமி, பாட்டாளி மக்கள் கட்சி உறுப்பினர் திரு. அ. கணேஷ்குமார் ஆகியோரும் அவையிலிருந்து வெளியேறினர்.)

7. அரசினர் சட்டமுன்வடிவு (அறிமுகம் செய்தல்)

தமிழ்நாடு தனியார் சட்டக் கல்லூரிகள் நிறுவுதல் (தடை செய்தல்) சட்ட முன்வடிவு, 2014

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அரசினர் சட்டமுன்வடிவு (அறிமுகம் செய்தல்). 2014 ஆம் ஆண்டு தமிழ்நாடு தனியார் சட்டக் கல்லூரிகள் நிறுவுதல் (தடை செய்தல்) சட்டமுன்வடிவு. மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2014 ஆம் ஆண்டு தமிழ்நாடு தனியார் சட்டக் கல்லூரிகள் நிறுவுதல் (தடை செய்தல்) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

8. மானியக் கோரிக்கைகள், 2014–2015, விவாதமும் வாக்கெடுப்பும்—*தொடர்ச்சி*

(அ) கோரிக்கை எண் 10—வணிக வரிகள் (வணிக வரி மற்றும் பதிவுத் துறை)

(ஆ) கோரிக்கை எண் 11—முத்திரைத் தாள்கள் மற்றும் பத்திரப் பதிவு (வணிக வரி மற்றும் பதிவுத் துறை)

(இ) கோரிக்கை எண் 9—பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை

– – –

(அ) கோரிக்கை எண் 10—வணிக வரிகள் (வணிக வரி மற்றும் பதிவுத் துறை)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 2014-2015 ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கைகள்மீது விவாதமும் வாக்கெடுப்பும். மானியக் கோரிக்கை எண் 10-வணிக வரிகள் (வணிக வரி மற்றும் பதிவுத்